**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 101/2022**
**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | (i) 1 வது எதிரி கடந்த 21.05.2021 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, 27.05.2021 ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளனர்.<br>(ii) 2 வது எதிரி கைது செய்யப்படவில்லை . காவல் உதவி ஆய்வாளரால் நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு , நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 15.10.2022 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 10.04.2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1– 21.05.2026 / 21.05.2026<br>அ.சா.2– 24.06.2026 / 24.06.2026 |
| 6. | பிரிவு 351(1)ஆ BNSS இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 29.06.2026 |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 04 ஆம் நாள் சனிக் கிழமை**
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் ஆனி திங்கள் 20 ம் நாள்
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 101/2022**
**(CNR. No. TNPD11000278-2022)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.101/2022 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஆதனக்கோட்டை காவல் நிலையம்<br>குற்ற எண். 93/2021 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>ஆதனக்கோட்டை காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. இளையராஜா, வயது 30/2021<br>சின்னையா,<br><br>2. பவுன்ராஜ்,<br>த/பெ. ஆறுமுகம்,<br><br>**<u>எதிரிகள் வசிப்பது</u>**<br>கூத்தாச்சிப்பட்டி,<br>பெருங்களூர் அஞ்சல்,<br>புதுக்கோட்டை தாலுகா மற்றும் மாவட்டம் |
| 5 | சம்பவ நாள் | 21.05.2021 |
| 6 | முறையீடு | 21.05.2021 |
| 7 | கைது | 1 வது எதிரி கடந் 21.05.2021 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டுள்ளார். 2 வது எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 8 | பிணையில் விடுவித்தல் | (i) 1 வது எதிரி கடந்த 21.05.2021 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, 27.05.2021 ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளனர்.<br>(ii) 2 வது எதிரி கைது செய்யப்படவில்லை . காவல் உதவி ஆய்வாளரால் நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு , நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு அழைப்பாணை சார்வு |



Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

| | | |
|---|---|---|
| | | செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். |
| 9 | விசாரணை துவக்கம் | 21.05.2026 |
| 10 | விசாரணை முடிவு | 24.06.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரிகள் சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து , எதிரிகளை குவிமுச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத் தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கு கடந்த 15.10.2022ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு , 04.07.2026ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக குற்றத்துறை அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.S.முருகேசன், B.A., B.L.** அவர்களும் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் , சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலணை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 21.05.2021ம் தேதி காலை 11.30 மணியளவில், கூத்தாச்சிப்பட்டி சாமிதுரை என்பவரது R.S பதி கொல்லையில் எதிரிகள் இருவரும் தமிழக அரசால் காய்ச்சவோ , விற்கவோ தடை செய்யப்பட்ட 2 லிட்டர் கொடிய நெடியுடன் கூடிய சாராயம் மற்றும் 75



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

லிட்டர் சாரய ஊறல் ஆகியவற்றை காய்ச்சி விற்பனைக்காக வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளனர். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தின் கீழ் ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு , எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு BNSS பிரிவு 230ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது . எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:–**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினர் . எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 4 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது . அரசுத் தரப்பில் அ.சா.பொ.1 முதல் அ .சா.பொ.4 வரையிலான சான்றுப் பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை . சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

6. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ .சா.2 முத்துமணி என்பவர், கடந்த 21.05.2021ம் தேதி காலை 11.30 மணியளவில் மது, சூது சம்மந்தமாக கண்காணிப்பதற்காக இரண்டாம் நிலை காவலர்கள் அ.சா.1 கந்தசாமி மற்றும் பட்டியல் சாட்சி-2 பாலமுருகன் ஆகியோருடன் கூத்தாச்சிப்பட்டி கிராமத்தில் உள்ள சாமிதுரை என்பவருக்கு சொந்தமான R.S. பதி கொல்லைக்கு சென்றபோது, மேற்படி கொல்லையில் கேஸ் சிலிண்டர் வைத்து ஒரு இரும்பு அடுப்பில் அடுக்கடுக்காக 3 அலுமினிய பாத்திரங்களை வைத்து சாராயம் காய்ச்சி கொண்டிருந்த இவ்வழக்கின் எதிரிகள் 1. இளையராஜா, 2. பவுன்ராஜ் ஆகியோர் போலிசாரை பார்த்து ஓட முற்பட்டதால், அதில் 1வது எதிரி இளையராஜா என்பவரை பிடித்து விசாரித்தபோது, சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய ஒரு வெள்ளைக்கேனில் 2 லிட்டர் சாராயம், அதற்கு அருகில் 100 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பேரலில் சாராய ஊறல் ஆகியவற்றுடன் 1வது எதிரி இளையராஜாவை குற்ற காரணம் கூறி கைது செய்துள்ளார்.

7. மேற்படி இடத்தில் வேறு சாட்சிகள் யாரும் இல்லாததால் காலை 12.00 மணியளவில் இரண்டாம் நிலை காவலர்கள் அ.சா.1 கந்தசாமி மற்றும் பட்டியல் சாட்சி-2 பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் சுமார் 500 மி.லி பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 250மி.லி சாராயத்தை மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்துள்ளார். எதிரிகள் சாராயம் காய்ச்ச பயன்படுத்திய அலுமினிய சட்டி 3, இரும்பு அடுப்பு 1, கேஸ் சிலிண்டர் 1, பிளாஸ்டிக் வாலி 1 ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அ .சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். மேற்படி வழக்குச் சொத்துக்கள் அ .சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் மதியம் 01.30 மணியளவில் மீதமிருந்த சாராயத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அங்கு கொட்டி அழித்து அ .சா.ஆ.2 அழித்தல் மகஜர் தயார் செய்துள்ளார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

**8.** பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி எதிரிகள் இளையராஜா, பவுன்ராஜ் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து , எதிரி இளையராஜா என்பவரை உரிய நடைமுறைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் . முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை அ .சா.ஆ.4 படிவம் – 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் . பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி –4 ரவி என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார் . காவல் உதவி ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கின் சட்டப்பிரிவுகளை 4(1)(a), 4(1)(b), 4(1)(g) r/w 4 (1–A) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தில் இருந்து சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டமாக பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.5 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். இத்துடன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

9. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றனர் . எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**11. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில் , அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

13. இருதரப்பும் கேட்கப்பட்டது . அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் , சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

14. அரசுத் தரப்பில் , கடந்த 21.05.2021ம் தேதி காலை 11.30 மணியளவில், கூத்தாச்சிப்பட்டி சாமிதுரை என்பவரது R.S பதி கொல்லையில் எதிரிகள் இருவரும் தமிழக அரசால் காய்ச்சவோ , விற்கவோ தடை செய்யப்பட்ட 2 லிட்டர் கொடிய நெடியுடன் கூடிய சாராயம் மற்றும் 75 லிட்டர் சாரய ஊறல் ஆகியவற்றை காய்ச்சி விற்பனைக்காக வைத்திருந்ததாக எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

15. அ.சா.1 கந்தசாமி தனது சாட்சியத்தில் , கடந்த 21.05.2021ம் தேதி , தான் ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணியில் இருந்த போது, அன்றைய தினம் காலை 09.00 மணியளவில், உதவி ஆய்வாளர் முத்துமணி , காவலர் பாலமுருகன் ஆகியோருடன் ஆதனக்கோட்டை , பெருங்களூர் மற்றும் மேட்டுப்பட்டி ஆகிய இடங்களுக்கு ரோந்து பணிக்கு சென்றபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கூத்தாச்சிபட்டி கிராமத்தில் உள்ள சாமிதுரை என்பவரின் R.S.பதி கொல்லைக்கு சென்று பார்த்தபோது, அங்கு கேஸ்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

சிலிண்டர் வைத்து ஒரு இரும்பு அடுப்பில் அடுக்கடுக்காக 3 அலுமினிய பாத்திரங்களை வைத்து சாராயம் காய்ச்சி கொண்டு இருந்தார்கள் என்றும் , அதற்கு அருகில் நின்று கொண்டு இருந்த 2 நபர்கள் தங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தார்கள் என்றும், அதில் ஒருவரை மடக்கி பிடித்துவிட்டோம் என்றும் , அவரை விசாரித்தபோது அவர் கூத்தாச்சிப்பட்டியை சேர்ந்த சின்னையா மகன் இளையராஜா என பெயர் முகவரி சொன்னார் என்றும், ஆஜர் 1வது எதிரி தான் மேற்படி இளையராஜா ஆவார் என்றும் , (சாட்சி நீதிமன்றத்தில் 1வது எதிரியை அடையாளம் காட்டினார் .) அங்கு இருந்து தப்பித்து சென்ற மற்றொரு நபர் யார் என்று கேட்ட போது கூத்தாச்சிப்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் மகன் பவுன்ராஜ் என்று சொன்னார் என்றும் , அப்போது அங்கு சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய ஒரு வெள்ளைக்கேன் இருந்தது என்றும் , அதில் 2 லிட்டர் சாராயம் இருந்தது என்றும் , அதனை முகர்ந்து பார்த்தபோது அது கெட்டை வாடை அடித்தது என்றும், அதற்கு அருகில் 100 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பேரல் இருந்தது என்றும், அதில் சாராய ஊறல் இருந்தது என்றும், அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் எதிரி இளையராஜா என்பவரை உதவி ஆய்வாளர் குற்ற காரணம் கூறி கைது செய்தார் என்றும் , அங்கு வேறு சாட்சிகள் யாரும் இல்லாததால் காலை 12.00 மணியளவில் தனது மற்றும் காவலர் பாலமுருகன் முன்னிலையில் சுமார் 500 மி.லி பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 250 மி.லி சாராயத்தை மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்தார் என்றும், மேற்படி மாதிரிகள், அலுமினிய சட்டி 3, இரும்பு அடுப்பு 1, கேஸ் சிலிண்டர் 1, பிளாஸ்டிக் வாலி 1 ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும் , பின்னர் மதியம் 01.30 மணியளவில் மீதமிருந்த சாராயத்தை தங்கள் முன்னிலையில் அங்கு கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார் என்றும் , தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடைது என்றும் , பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி எதிரிகள் இளையராஜா , பவுன்ராஜ் ஆகியோர் மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும் , உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

16. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 முத்துமணி தனது சாட்சியத்தில், கடந்த 21.05.2021 ம் தேதி, தான் ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, அன்றைய தினம் காலை 11.30 மணியளவில், மது, சூது சம்மந்தமாக கண்காணிப்பதற்காக இரண்டாம் நிலை காவலர்கள் கந்தசாமி, பாலமுருகன் ஆகியோருடன் கூத்தாச்சிபட்டி கிராமத்தில் உள்ள சாமிதுரை என்பவரின் R.S. பதி கொல்லைக்கு சென்று பார்த்தபோது அங்கு கேஸ் சிலிண்டர் வைத்து ஒரு இரும்பு அடுப்பில் அடுக்கடுக்காக 3 அலுமினிய பாத்திரங்களை வைத்து சாராயம் காய்ச்சி கொண்டு இருந்தார்கள் என்றும், அதற்கு அருகில் நின்று கொண்டு இருந்த 2 நபர்கள் தங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தார்கள் என்றும் , அதில் ஒருவரை மடக்கி பிடித்துவிட்டோம் என்றும், அவரை விசாரித்தபோது அவர் கூத்தாச்சிப்பட்டியை சேர்ந்த சின்னையா மகன் இளையராஜா என பெயர் முகவரி சொன்னார் என்றும் , ஆஜர் 1 வது எதிரி தான் மேற்படி இளையராஜா ஆவார் என்றும் , (சாட்சி நீதிமன்றத்தில் 1 வதாக நின்ற எதிரியை அடையாளம் காட்டினார் .) ( அவர் பெயரை நீதிமன்றத்தில் கேட்டபோது பவுன்ராஜ் என்று கூறினார் . ) அப்போது அங்கு சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய ஒரு வெள்ளைக்கேன் இருந்தது என்றும் , அதில் 2 லிட்டர் சாராயம் இருந்தது என்றும், அதற்கு அருகில் 100 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பேரல் இருந்தது என்றும், அதில் சாராய ஊறல் இருந்தது என்றும் , அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் எதிரி இளையராஜா என்பவரை நான் குற்ற காரணம் கூறி கைது செய்தேன் என்றும், அங்கு வேறு சாட்சிகள் யாரும் இல்லாததால் காலை 12.00 மணியளவில் காவலர்கள் கந்தசாமி மற்றும் பாலமுருகன் முன்னிலையில் சுமார் 500 மி.லி பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 250 மி.லி சாராயத்தை மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்தேன் என்றும், மேற்படி மாதிரிகள், அலுமினிய சட்டி 3, இரும்பு அடுப்பு 1, கேஸ் சிலிண்டர் 1, பிளாஸ்டிக் வாலி 1 ஆகியவற்றை மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றி அவர்களிடம் கையொப்பம் பெற்றேன் என்றும் , பின்னர் மதியம் 01.30 மணியளவில் மீதமிருந்த சாராயத்தை மேற்படி காவலர்கள் முன்னிலையில் அங்கு கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தேன் என்றும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி எதிரிகள் இளையராஜா, பவுன்ராஜ் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தேன்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

என்றும், பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துகளை படிவம் – 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், கைது செய்யப்பட்ட எதிரி இளையராஜா என்பவரை உரிய நடைமுறைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ரவி என்பவரின் பார்வைக்கு வைத்தேன் என்றும் , அவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் கோப்பினை பார்வையிட்டு வழக்கின் சட்டப்பிரிவுகளை 4(1)(a), 4(1)(b), 4(1)(g) r/w 4 (1–A) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தில் இருந்து சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டமாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும் , பின்னர் இத்துடன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும் , தான் இவ்வழக்கில் பெரும்பாலான புலன் விசாரணை செய்துள்ளதால் உதவி ஆய்வாளர் ரவி என்பவருக்காவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. அரசுத் தரப்பில் கடந்த 21.05.2021ம் தேதி காலை 11.30 மணியளவில், ஆதனக்கோட்டை கூத்தாச்சிப்பட்டி சாமிதுரை என்பவருக்கு சொந்தமான ஆர்.எஸ்.பதி கொல்லையில் சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளைக் கேனில் இருந்த 2 லிட்டர் சாராயம் மற்றும் சுமார் 3 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பேரலில் இருந்த சுமார் 75 லிட்டர் சாராய ஊரல் ஆகியவற்றை சாட்சிகள் இரண்டாம் நிலை காவலர்கள் அ.சா.1 கந்தசாமி மற்றும் பட்டியல் சாட்சி –2 பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றியதாக கூறப்பட்டுள்ளது . மேற்படி இரண்டாம் நிலை காவலர் பாலமுருகன் வழக்கு விசாரணைக்கு முன்பு இறந்துவிட்டதால், அவர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை . இவ்வழக்கில் வழக்கு சொத்தான சாராயம் கைப்பற்றப்பட்டது குறித்து தனி நபர் சாட்சிகள் எவரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்படவில்லை . இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்துள்ள அ .சா.2 உதவி ஆய்வாளர் முத்துமணி தனது நீதிமன்ற சாட்சியத்தில் இவ்வழக்கில் கைது



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ள இளையராஜா என்பவரை நீதிமன்றத்தில் சரியாக அடையாளம் காட்டாமல், 2ம் எதிரி பவுன்ராஜ் என்வரை எதிரி இளையராஜா என மாற்றி அடையாளம் காட்டியுள்ளார்.

18. மேலும், அரசு தரப்பில் எதிரி எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இன்றி நாட்டு சாராயம் வைத்திருந்ததாக சாமிதுரை ஆர் .எஸ்.பதி கொல்லையில் வைத்து கைது செய்து வழக்கு சொத்தினை கைப்பற்றி, எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது . எனவே இவ்வழக்கில் முதலில் எதிரி கைது செய்யப்பட்டு வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்டு அதன் பிறகு தான் காவல் நிலையத்தில் வைத்து எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எதிரியை கைது செய்தபோது உதவி ஆய்வாளர் அ.சா.2 முத்துமணி என்பவரால் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு அ .சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரை பரிசீலனை செய்ததில் , அந்த ஆவணங்களில் வழக்கின் குற்ற எண் மற்றும் எதிரிகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1ம் எதிரியை கைது செய்த பிறகு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்பாக சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக கூறப்படும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் வழக்கின் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதால் , அரசுத்தரப்பு வழக்கில் பலத்த சந்தேகம் எழுகிறது . இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாத நிலையில், மேற்படி ஆவணங்களும் அரசுத் தரப்பு வழக்கிற்கு முரணாக உள்ளதால் , அரசுத்தரப்பு வழக்கு நம்பத்தகுந்ததாக இல்லை.

19. இவ்வழக்கில் 1வது எதிரி மூலமாக 2 லிட்டர் நாட்டு சாராயம் மற்றும் 75 லிட்டர் சாராய ஊரல் கைப்பற்றப்பட்டதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது . மேலும், மேற்படி கைப்பற்றப்பட்ட 2 லிட்டர் நாட்டு சாராயத்திலிருந்து 500 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

பாட்டில்களில் தலா 250 மி.லி சாராயத்தை மாதிரிக்கு எடுத்ததாக கூறப்பட்டுள்ளது . ஆனால், மேற்படி மாதிரிகளை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைப்பதற்கு புலன் விசாரணை அதிகாரியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை . அதனை அ.சா.2 உதவி ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில் , "கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சாராயம் பகுப்பாய்விற்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான் " என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே, எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள் சாராயம் என்பதை நிரூபணம் செய்வதற்கு அரசுத் தரப்பில் எந்தவித ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்டபோது கெட்ட நெடியுடன் இருந்ததாக அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளது மட்டுமே கைப்பற்றப்பட்ட பொருள் சாராயம் என்பதை நிரூபணம் செய்வதாக அமையாது.

20. தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டம் 1937 பிரிவு 32ஐ இங்கு காண்பது பொருத்தமானதாக இருக்கும்.

**32. Arrest of offenders and seizure of contraband liquor and articles without warrant.–** Any prohibition Officer, any officer of the Police or Land Revenue Departments, and any other person authorized in that behalf–

(a) may arrest without warrant any person found committing an offence punishable [under section 4, sub-section (1) or Section 5 [or section 7 or Section 24 or any offence punishable with rigorous imprisonment for three years and upwards];

b) may seize and detain any liquor, drug or other article which he has reason to believe to be to confiscation under this Act; and

c) may search any person, vessel, vehicle, animal package, receptacle or covering, upon whom or in or upon which, he may have reasonable cause to suspect any such liquor, drug or other article to be or to be concealed:

Provided that if the officer or person making the arrest under this section be not empowered under section 27 to admit to bail, the person arrested shall be forthwith forwarded to an officer so empowered; if such an officer is known to be within a distance of five miles from the place where such arrest took place and is shall be the duty of such officer empowered as



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

aforesaid to admit such person to bail if sufficient bail be tendered for his appearance before a Police or Prohibition Officer or Magistrate having jurisdiction to inquire into the case:

[Provided further that where any toddy or wash or any sonti soru is seized under this section by any officer or person, such officer or person may destroy or cause to be destroyed on the spot, the toddy, wash or sonti soru and send the pots or other receptacles in which the toddy, wash or sonti soru was kept the Police or prohibition Officer or Magistrate having jurisdiction to inquire into the case.

Provided also that where any [illicit arrack] is seized under this section by any officer or person, such officer or person may, in the presence of a prohibition Officer or any Police officer not below the rank of Inspector–

(i) take two samples of the [illicit arrack] or such quantity and in such manner as may be prescribed,and

(ii) destroy or cause to be destroyed the [illicit arrack] and send the pots or other receptacles in which the [illicit arrack] was kept together with the samples taken and a certificate from the Officer in whose presence the samples were taken and the [illicit arrack] was destroyed, as to the total quantity of [illicit arrack] seized, the total quantity taken as samples and the total quantity destroyed, to the Magistrate having jurisdiction to inquiry into the case. The Magistrate shall, upon the receipt of the samples, retain one in his Court and send the other to such Officer as may be prescribed for chemical Analysis.

21. மேற்படி பிரிவின்படி நாட்டு சாராயம் அல்லது கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டால் காவல் ஆய்வாளருக்கு குறையாத பதவி நிலையில் உள்ள காவல் அதிகாரி முன்னிலையில் இரண்டு மாதிரிகள் எடுக்கப்பட்டு மேற்படி அதிகாரி முன்னிலையில் அழிக்கப்பட வேண்டும். சாராயம் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் மற்றும் இதர பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் . ஆனால், இவ்வழக்கில் அவ்வாறு காவல் ஆய்வாளர் முன்னிலையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவும் இல்லை, மாதிரி எடுக்கப்படவும் இல்லை , அழிக்கப்படவும் இல்லை . மேலும்,



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

இவ்வழக்கில் நாட்டு சாராயம் வைத்திருந்ததாக கூறப்படும் வெள்ளைக் கேன் மற்றும் சாராய ஊரல் வைத்திருந்ததாக கூறப்படும் பிளாஸ்டிக் பேரல் ஆகியவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை . மேற்படி பிரிவின் படி கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை புலன் விசாரணை அதிகாரி பின்பற்றவில்லை என்பதும் அரசுத் தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

22. எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**23. முடிவாக, எதிரிகள் சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(b), 4(1)(g) தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து , எதிரிகளை குவிமுச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

24. இந்நீதிமன்ற வழக்குச் சொத்து எண் .40/2022 இல் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அ.சா.பொ.1, அ.சா.பொ.3 மற்றும் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரும்பு அடுப்பு 1, அலுமினிய சட்டி 3, பிளாஸ்டிக் வாளி 1 ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

25. அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கேஸ் சிலிண்டரை பொறுத்து எதிரிகள் தரப்பில் உரிமை கோரப்படவில்லை . மேலும், எதிரிகள் தரப்பில் அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளதுபோல் 1ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும் , அவரிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எனவே, அ.சா.பொ.2 கேஸ் சிலிண்டரை சம்மந்தப்பட்ட எரிவாயு நிறுவனத்திடம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

26. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணைய பத்திரங்களை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு , அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 04.07.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்:–**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. கந்தசாமி | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி (இரண்டாம் நிலை காவலர்) |
| அ.சா.2 | திரு. முத்துமணி | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.05.2026 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 21.05.2026 | அழித்தல் மகஜர் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 24.06.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 24.06.2026 | படிவம் 91 | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | 24.06.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.2 |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருட்கள்:–</u>** உண்டு

| வழக்குச் சொத்தின் வரிசை | வழக்குச் சொத்து எண் | வழக்குச் சொத்தின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| அ.சா.பொ.1 | 40/2022 | இரும்பு அடுப்பு –1 | அ.சா.2 |
| அ.சா.பொ.2 | | அலுமினிய சட்டி– 3 | அ.சா.2 |
| அ.சா.பொ.3 | | கேஸ் சிலிண்டர் –1 | அ.சா.2 |
| அ.சா.பொ.3 | | பிளாஸ்டிக் வாளி –1 | அ.சா.2 |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்::–</u>** இல்லை

**<u>குறிப்பு:–</u>**

1. 1வது எதிரி கடந்த 21.05.2021ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு , 27.05.2021ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்று ள்ளனர். 2வது எதிரி கைது செய்யப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளரால் நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு , நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து உண்டு.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.07.04 17:20:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**

.